ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2231/21 - 2021 ජූනි මස 11 වැනි සිකුරාදා - 2021.06.11

*2231/21 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச. வ. பி. 21/1978* (X) (*அ*).

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் ஆகிய நான், இன்ரநஷனல் இன்சிரியூட் ஒப் ஹெல்த் சயன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின்கீழ் அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, பதிவிலக்கம்* PV *66370 ஐக் கொண்டதும் இல. 700, நீர்கொழும்பு வீதி, மத்துமகல, ராகம என்னுமிடத்தில் அமைந்துள்ளதுமான 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளதும், இதற்கான* I *ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய, இதற்கான* II *ஆம் அட்டவணையின் நிரல்* I *இல் குறித்துரைக்கப்பட்ட பட்டம் வழங்குவதற்கு இட்டுச் செல்லுகின்றதும் இதன்கண் உயர் கல்வியை விருத்தி செய்யும் நோக்கத்திற்காக பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றாக இன்ரநஷனல் இன்சிரியூட் ஒப் ஹெல்த் சயன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டை இக்கட்டளை மூலம் ஏற்றங்கீகரிக்கின்றேன். அதன் சுருக்கீடு இதற்கான* II *ஆம் அட்டவணையின்* II *ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் தரப்பட்டுள்ளது.*

***அட்டவணை*** I

*நிபந்தனைகள்*

1. *பட்டம் வழங்கும் நிறுவகமொன்றாக இக்கட்டளை மூலம் ஏற்றங்கீகரிக்கப்பட்டுள்ள இன்ரநஷனல் இன்சிரியூட் ஒப் ஹெல்த் சயன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, இக்கட்டளை வெளியிடப்படும் திகதியிலிருந்து ஒவ்வோர் ஐந்து* (5) *ஆண்டுகளும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் விடய மீள்-மீளாய்வு ஒன்றுக்கமைய, இதற்கான* II *ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தினை வழங்கலாம்.*

2. இன்ரநஷனல் இன்சிரியூட் ஒப் ஹெல்த் சயன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, இதற்கான II ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பட்டத்துக்கு இயைபான பட்ட நிகழ்ச்சித் திட்டத்தினை இல. 700, நீர்கொழும்பு வீதி, மத்துமகல, ராகம என்னுமிடத்தில் மட்டும் நடாத்துதல் வேண்டும்.

3. இன்ரநஷனல் இன்சிரியூட் ஒப் ஹெல்த் சயன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, இதற்கான II ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பட்டம் தொடர்பான பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது ஆகக்குறைந்த நுழைவுத் தகைமையாகப் பின்வருவதனைக் கடைப்பிடித்தல் வேண்டும் :-

(அ) க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் வர்த்தக விடயத்துறையில் மூன்று (3) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமை ; அல்லது

(ஆ) குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட இணைக் கற்கைநெறி ஒன்றுடன் க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் ஏதேனும் விடயத் துறையில் மூன்று (3) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமை.

**அட்டவணை II**

| நிரல் I<br>பட்டம் | நிரல் II<br>பட்டத்துக்கான சுருக்கீடு |
|---|---|
| வியாபார நிருவாக மாணி (சிறப்பு) | பிபிஏ (சிறப்பு) |

பேராசிரியர் **ஜீ. எல். பீரிஸ்,**
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2021, மே 20.

06-270

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.